இணைப்பு I.

(..........11ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 610-க்கான விடையைக் காண்க.)

கோவை மாவட்டம் புனலாம்பட்டி கிராமத்திலிருந்து தொல் பொருள்கள் ஏதும் கண்டெடுக்கப்படவில்லை. ஆனால் போலு மாம்பட்டி என்பதே சரியாக அழைக்கப்படுவதாகும். இவ்வூரி லிருந்து பல வரலாற்றுச் சிறப்புமிக்க பழங்கலாச் சின்னங்களைத் தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது.

இவ்வூரில் உள்ள சிறு மேட்டுப் பகுதியாக இருந்த இடம் விளைநிலமாகப் பயன்படுத்தப்பட்டு வேளாண்மை செய்யப்பட்டு வருகிறது. அங்குத் தோண்டும்பொழுது சுமார் 3 அடி ஆழத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நான்கு செங்கற்களுக்கு இடையில் ஒரு சிறு கலப்பையும், அதனை இரு எருதுகள் இழுக்கும் நிலையில் இருந்ததாகவும் கூறினர். அதனை எடுத்தவர்கள் அதனுடைய வரலாற்றுச் சிறப்பும், கலை நுணுக்கமும் அறியாது அழித்து விட்டார்கள். அதில் ஒரு எருது மட்டும் தொல்பொருள் ஆய்வுத் துறையால் மீட்கப்பட்டது. இவ்வெருது செம்பால் ஆனது 5 சென்டி மீட்டர் நீளம் உடையது. மேலும் இங்கு பழங்காலச் செங்கற்கள் அதிக அளவில் கிடைத்துள்ளதால் இதைக் கட்டிடங் கட்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என கருதப்படுவதோடு இவ்விடம் முற்காலத்தில் மக்கள் வாழ்ந்த பகுதியாக இருத்தல் வேண்டும்.

இதே பகுதியிலிருந்து முன்னர் இரு சுடுமண்பாவைகளின் தலைப்பகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன. இவை இரண்டும் மிக அழகும் கலை நுணுக்கமும் வாய்ந்தவை. இப் பகுதி மிகவும் பிற்காலத்தில் பெரும் தீ விபத்துக்குள்ளாகி மணலில் பெரும் பகுதி சாம்பல் நிறைந்து காணப்படுகிறது. இப்பொழுது அங்கு பயிர் விளைந் திருப்பதால் தொல்லியலாய்வு தொடரப்படவில்லை. அறுவடை யான பின்னர் அங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளலாமா என்பது பற்றிக் கருதப்படும்.